**நீதித்துறை நடுவர் எண்.II நீதிமன்றம், திருவில்லிபுத்தூர்**
**முன்னிலை: திரு.சி.பாரதி, B.A.,B.L.,M.J.M.C.,**
**நீதித்துறை நடுவர் எண்.II, திருவில்லிபுத்தூர்.**
**2024-ஆம் ஆண்டு ஜூன் மாதம் 28-ஆம் நாள் வெள்ளிக்கிழமை**
**ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.446/2022**

CRP Rule 106

| | |
|---|---|
| குற்றமுறையிடுபவர் | அரசுக்காக:–<br>காவல் உதவி ஆய்வாளர்,<br>திருவில்லிபுத்தூர் நகர் காவல் நிலையம்,<br>குற்ற எண்.174/2016 |
| குற்றம்சாட்டப்பட்டவர் | 1. முனியம்மாள்,<br>த/பெ.சங்கிலி வீரப்பன்,<br>சித்தாலம்புத்தூர்.<br>2. வையாலிமுத்து,<br>த/பெ.சங்கிலி வீரப்பன்,<br>சித்தாலம்புத்தூர்.<br>3. உலகம்மாள்,<br>த/பெ.சங்கிலி வீரப்பன்,<br>சித்தாலம்புத்தூர்.<br>4. கருப்பையா,<br>த/பெ.குருசாமி,<br>சித்தாலம்புத்தூர்.<br>5. சிவகாமி,<br>த/பெ.கருப்பையா,<br>சித்தாலம்புத்தூர்.<br>6. செல்வி,<br>த/பெ.கருப்பையா,<br>சித்தாலம்புத்தூர். |
| குற்ற நிகழ்வு நாள் | 13.03.2016 |
| புகார் நாள் | 13.03.2016 |
| கைது நாள் | Nil |
| பிணையில் சென்ற நாள் | 31.03.2016–ம் தேதி முன் பிணையில் சென்றுள்ளார்கள். |
| Commitment | இல்லை |



C BHARATHI Digitally signed by C BHARATHI Date: 2024.06.28 18:29:27 +0530

| | |
|---|---|
| விசாரணை தொடங்கிய நாள் | 13.02.2024 |
| விசாரணை முடிந்த நாள் | 26.06.2024 |
| தண்டனை அல்லது தீர்ப்பு நாள் | 28.06.2024 |
| தீர்ப்பு நகல் எதிரிக்கு கொடுத்த நாள் | இல்லை |
| காலதாமதத்திற்கான காரணம் | - |

இவ்வழக்கானது 22.07.2022-ஆம் தேதியன்று இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு, என் முன்பாக 26.06.2024-ஆம் தேதியன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது, அரசு தரப்பில் கற்றறிந்த அரசு குற்றவியல் வழக்கறிஞர் நிலை–2 திரு.S.ஆனந்த்ராஜா B.A.,B.L., அவர்கள் முன்னிலையாகியும், எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர் R.முருகன், B.A., B.L., அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்களை கேட்டும், இதுநாள் வரையில் என் சீரிய பரிசீலனையில் இருந்து வந்தும், ஆவணங்களை ஆராய்ந்தும், இறுதி பரிசீலனைக்குப் பின் இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு பிறப்பிக்கும்.........

## தீர்ப்புரை

கடந்த 13.03.2016ம் தேதி 17.00 மணிக்கு வாதி இராஜேந்திரன் சித்தாலம்புத்தூர், நடுத்தெருவில் கட்டிவரும் வீட்டில் மண் அள்ளி போட்டுக்கொண்டிருந்தபோது எதிரிகள் சேர்ந்து வாதியை பார்த்து ஊர் விட்டு ஊர் வந்து இங்க ஏண்டா வீடு கட்டுற தேவிடியா மகனே என்று அசிங்கமாக பேசி கீழே தள்ளியும், 1வது எதிரி கம்பால் வாதியின் வயிற்றிலும், முதுகிலும் அடித்தும், 2வது எதிரி செங்கலால் வாதியின் முதுகில் அடித்து வீக்க காயத்தை ஏற்படுத்தியும், எதிரிகள் அனைவரும் சேர்ந்து வாதியைப் பார்த்து இந்த இடத்தில் நீ எப்போது வீடு கட்டினாலும் கொல்லாமல் விட மாட்டோம் என்று மிரட்டி குற்றம் புரிந்துள்ளதாக தெரிவித்து 1, 2 வது எதிரிகளின் மீது சட்டப்பிரிவுகள் 147, 294(b), 324, 506(2) இதசவின் கீழும், 3 முதல் 6 எதிரிகளின் மீது சட்டப்பிரிவுகள் 147, 294(b), 506(2)



C BHARATHI
Digitally signed by C BHARATHI
Date: 2024.06.28 18:29:34 +0530

இதசவின் கீழும் தண்டிக்கத்தக்கவர்கள் என்று திருவில்லிபுத்தூர் நகர் காவல் நிலைய காவல் உதவி ஆய்வாளர் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**2)** எதிரிகள் நீதிமன்றத்தில் முன்னிலையானபோது, எதிரிகளுக்கு அரசு தரப்பில் தாக்கலான ஆவணங்களின் நகல்கள் யாவும் குவிமுச பிரிவு 207-ன் படி இலவசமாக வழங்கப்பட்டு, குற்றம் குறித்து வினவியபோது குற்றவாளிகள் இல்லை என்றார்கள். போதிய கால அவகாசத்திற்கு பிறகு 1, 2 வது எதிரிகளின் மீது சட்டப்பிரிவுகள் 147, 294(b), 324, 506(2) இதசவின் கீழும், 3 முதல் 6 எதிரிகளின் மீது சட்டப்பிரிவுகள் 147, 294(b), 506(2) இதசவின் கீழும் குற்றச்சாட்டு வனைந்து விளக்கி வினவியபோது எதிரிகள் தாங்கள் குற்றவாளிகள் இல்லை என மறுத்தனர். எனவே அரசு தரப்பு சாட்சிகள் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

**3)** அரசு தரப்பில் அசா.1 முதல் அசா.9 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, அ.சாஆ.1 முதல் அ.சாஆ.8 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

**<u>4) அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சிய சுருக்கம்:-</u>**

**4-(1)** இவ்வழக்கின் புகார்தாரரான திரு.இராஜேந்திரன்(அ.சா.1), கடந்த 13.03.2016 ம் தேதி மாலை 05.00 மணியளவில் சித்தாலம்புத்தூர் நடுத்தெருவில் தனக்கு பாத்தியமான இடத்தில் வீடு கட்ட மணல் சலித்துக்கொண்டிருந்தபோது, எதிரிகள் சேர்ந்து தன்னை பார்த்து ஊர்விட்டு ஊர்வந்து இங்கு வந்து வீடு கட்டுகிறாயா என்று சொல்லி தேவிடியா மகனே என அசிங்கமான திட்டியதாகவும், முனியம்மாள் கம்பாலும், வையாலிமுத்து பனஞ்சட்டம் மற்றும் செங்கலாலும் தாக்கியதில் ஊமை காயம் ஏற்பட்டதாகவும், இந்த இடத்தில் இனிமேல் வீடு கட்டினால் உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என எதிரிகள் மிரட்டியதாகவும், திருவில்லிபுத்தூர் நகர் காவல் நிலையத்தில் புகார்(அ.சா.ஆ.1) கொடுத்துவிட்டு, திருவில்லிபுத்தூர் அரசு மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சைக்கு சேர்ந்ததாக சாட்சியம் அளித்துள்ளார்.

**4-(2)** திரு.பாலமுருகன் (அ.சா.8) உதவி ஆய்வாளர், கடந்த 2016 ம் வருடம் தான் பணியிலிருந்தபோது 13.03.2016 ம் தேதி 19.40 மணிக்கு திருவில்லிபுத்தூர்



C BHARATHI Digitally signed by C BHARATHI Date: 2024.06.28 18:29:38 +0530

அரசு மருத்துவமனையிலிருந்து கிடைக்கப்பெற்ற தகவலை பெற்று அங்கு சிகிச்சையிலிருந்த திரு.ராஜேந்திரன்(அ.சா.1) என்பவரை விசாரித்து, அவரிடமிருந்து எழுத்து பூர்வமான புகார் மனுவை(அ.சா.ஆ.1) பெற்று, நிலைய குற்ற எண்.174/2016 பிரிவுகள் 147, 148, 294(பி), 323, 506(1) இதசவாக முதல் தகவல் அறிக்கை(அ.சா.ஆ.5) பதிவு செய்துள்ளார்.

**4-(3)** அன்றையதினமே சம்பவ இடம் சென்று சாட்சிகள் திரு.முத்துபாண்டி(அ.சா.3), திரு.வைரமுத்து(அ.சா.4) ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர்(அ.சா.ஆ.6), மாதிரி வரைபடம்(அ.சா.ஆ.7) தயார் செய்து, சாட்சிகள் திரு.ராஜேந்திரன்(அ.சா.1), திரு.சங்கரலிங்கம் (அ.சா.5), திருமதி.கிருஷ்ணம்மாள் (அ.சா.6), திருமதி.கருப்பாயி(அ.சா.2), திரு.முத்துபாண்டி, திரு.வைரமுத்து(அ.சா.4) ஆகியோரை விசாரித்து வாக்குமுலம் பதிவு செய்துள்ளார்.

**4-(4)** வழக்கின் எதிரிகள் நீதிமன்றத்தில் முன் பிணையில் சென்று விட்டதால் அவர்களை கைது செய்யவில்லை எனவும், சாட்சிகளின் வாக்குமூலத்திலிருந்து எதிரிகள் அபாயகரமான ஆயுதங்களை பயன்படுத்தவில்லை என்று தெரிய வந்ததால் இவ்வழக்கின் சட்டப்பிரிவுகள் 147, 148, 294(பி), 323, 506(1) இதசவாக இருந்ததை சட்டப்பிரிவுகள் 147, 294(பி), 323, 506(1) இதசவாக சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை(அ.சா.ஆ.8) தயார் செய்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார்.

**4-(5)** மருத்துவர் திரு.காளிராஜ்(அ.சா.7) என்பவரை விசாரித்து வாக்குமுலம் பதிவு செய்து காயச்சான்று(அ.சா.ஆ.4) பெற்று, பணிமாறுதலாகி சென்று விட்டதால் வழக்கு கோப்புகளை விசாரணைக்காக சார்பு ஆய்வாளர் திருமதி.இராமலட்சுமி(அ.சா.9) என்பவரின் பார்வைக்கு வைத்ததாக சாட்சியம் அளித்துள்ளார்.

**4-(6)** திருமதி.இராமலட்சுமி (அ.சா.9) புலன் விசாரணை அதிகாரி, கடந்த 22.11.2016 ம் தேதி பணியிலிருந்தபோது உதவி ஆய்வாளர் திரு.பாலமுருகன்(அ.சா.8) என்பவர் முதல் புலன் விசாரணை செய்து வைத்திருந்த



C BHARATHI Digitally signed by C BHARATHI Date: 2024.06.28 18:29:42 +0530

நிலைய குற்ற எண்.174/2016 வழக்கினை தனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு, சம்பவ இடம் சென்று சாட்சிகளை விசாரித்தபோது முந்தைய உதவி ஆய்வாளரிடம் கூறியதையே தன்னிடமும் கூறியதால் தனியாக வாக்குமூலம் பதிவு செய்யவில்லை எனவும், தனது புலன் விசாரணையை முடித்து எதிரிகள் மீது சட்டப்பிரிவுகள் 147, 294(பி), 323, 506(1) இதசவின் படி குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளதாக சாட்சியம் அளித்துள்ளார்

**5)** இத்துடன் அரசு தரப்பு சாட்சியம் முடித்துக் கொள்ளப்பட்டு, எதிரிகளுக்கு எதிராக தோன்றிய அரசு தரப்பு சாட்சிய சங்கதிகளை தொகுத்து எதிரிகளிடம் குவிமுச பிரிவு 313(1)(ஆ)–ன் படி வினவியபோது எதிரிகள் சாட்சியை பொய் எனக் கூறி மறுத்தனர். எதிரிகள் தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என சொன்னார். சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

6) **தீர்வுக்குரிய பிரச்சனை :–**

**அரசு தரப்பால் எதிரிகளின் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு எவ்வித சந்தேகத்திற்கும் இடமின்றி நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா? என்பதேயாகும்**.

**7)** கடந்த 13.03.2016ம் தேதி 17.00 மணிக்கு அ.சா.1 சித்தாலம்புத்தூர், நடுத்தெருவில் கட்டிவரும் வீட்டில் மண் அள்ளி போட்டுக்கொண்டிருந்தபோது எதிரிகள் சேர்ந்து அ.சா.1 ஐ பார்த்து ஊர் விட்டு ஊர் வந்து இங்க ஏண்டா வீடு கட்டுற தேவிடியா மகனே என்று அசிங்கமாக பேசி கீழே தள்ளியும், 1வது எதிரி கம்பால் அ.சா.1ன் வயிற்றிலும், முதுகிலும் அடித்தும், 2வது எதிரி செங்கலால் அ.சா.1ன் முதுகில் அடித்து வீக்க காயத்தை ஏற்படுத்தியும், எதிரிகள், அ.சா.1 ஐ பார்த்து இந்த இடத்தில் நீ எப்போது வீடு கட்டினாலும் கொல்லாமல் விட மாட்டோம் என்று மிரட்டி குற்றம் புரிந்துள்ளதாக அரசு தரப்பு வழக்காகும்.

**8)** அரசு தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் வாதிடும்போது, அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள் அனைவரும் எவ்வித முரண்பாடுகளும் இன்றி தெளிவாக சாட்சியம் அளித்துள்ளார்கள் என்றும், எனவே எதிரிகளை தண்டிக்க வேண்டும் என்றும் வாதிட்டார்.



C BHARATHI Digitally signed by C BHARATHI Date: 2024.06.28 18:29:47 +0530

**9)** எதிரிகள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் வாதிடும்போது, அ.சா.1ன் சாட்சியத்திற்கும், விபத்து பதிவேட்டிற்கும் ஒன்றுக்கொன்று முரணாக உள்ளது என்றும், கண்ணுற்ற சாட்சியான அ.சா.2, 5, 6 மற்றும் பார்வை மகஜர் சாட்சியான அ.சா.3, 4 ஆகியோர்கள் அரசு தரப்பிற்கு பாதகமாக சாட்சியம் அளித்துள்ளனர் என்றும், முதல் தகவல் அறிக்கை 8 நாட்கள் காலதாமதமாக நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டது சம்பந்தமாக எவ்வித விளக்கமும் அரசு தரப்பில் இந்நீதிமன்றத்தில் முன்னிலை படுத்தபடவில்லை என்றும், அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்கள் வாயிலாக எதிரிகள் மீதான குற்றச் செயல் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படாததால் எதிரிகளை இவ்வழக்கிலிருந்து விடுதலை செய்யவேண்டும் என வாதிடப்பட்டது.

**10)** இவ்வழக்கில் அரசு தரப்பில் 9 சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளனர். இவ்வழக்கில் புகார்தாரரான திரு.இராஜேந்திரன்(அ.சா.1), கடந்த 13.03.2016ம் தேதி மாலை 05.00 மணியளவில் சித்தாலம்புத்தூர் நடுத்தெருவில் தனக்கு பாத்தியமான இடத்தில் வீடு கட்ட மணல் சலித்துக்கொண்டிருந்தபோது, எதிரிகள் சேர்ந்து தன்னை பார்த்து ஊர்விட்டு ஊர்வந்து இங்கு வந்து வீடு கட்டுகிறாயா என்று சொல்லி தேவிடியா மகனே என அசிங்கமான திட்டியதாகவும், முனியம்மாள் கம்பாலும், வையாலிமுத்து பனஞ்சட்டம் மற்றும் செங்கலாலும் தாக்கியதில் ஊமை காயம் ஏற்பட்டதாகவும், இந்த இடத்தில் இனிமேல் வீடு கட்டினால் உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என எதிரிகள் மிரட்டியதாகவும், திருவில்லிபுத்தூர் நகர் காவல் நிலையத்தில் புகார்(அ.சா.ஆ.1) கொடுத்துவிட்டு, திருவில்லிபுத்தூர் அரசு மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சைக்கு சேர்ந்ததாக சாட்சியம் அளித்துள்ளார்.

**11**) கண்ணுற்ற சாட்சியான திருமதி.கருப்பாயி(அ.சா.2), **"எதிரி வையாலிமுத்துவிற்கும், இராஜேந்திரனுக்கும் வாய்சண்டை ஏற்பட்டதாகவும், அடிபுடி சண்டை நடக்கவில்லை"** என அரசு தரப்பிற்கு மாறாக பிறழ் சாட்சியம் அளித்துள்ளார். மற்றொரு கண்ணுற்ற சாட்சியான திரு.சங்கரலிங்கம் (அ.சா.5), **"சம்பவம் என்ன நடந்ததென்று தனக்கு தெரியாது"** என அரசு தரப்பிற்கு பாதகமாக



C BHARATHI Digitally signed by C BHARATHI Date: 2024.06.28 18:29:51 +0530

சாட்சியம் அளித்துள்ளார். மற்றொரு கண்ணுற்ற சாட்சியான திருமதி.கிருஷ்ணம்மாள்(அ.சா.6), **"இந்த வழக்கு சம்மந்தமாக தனக்கு எதுவும் தெரியாது"** என அரசு தரப்பிற்கு மாறாக சாட்சியம் அளித்துள்ளார்.

12) பார்வை மகஜர் சாட்சியான திரு.முத்துப்பாண்டி(அ.சா.3), **"போலீசார் தன்னிடம் வெற்று பேப்பரில் கையெழுத்து வாங்கிக்கொண்டதாக"** அரசு தரப்பிற்கு மாறாக சாட்சியம் அளித்துள்ளார். மற்றொரு பார்வை மகஜர் சாட்சியான திரு.வைரமுத்து(அ.சா.4), **"கையெழுத்தினை எப்போது போட்டேன் என்று தனக்கு தெரியாது"** எனவும், போலீசார் தன்னை விசாரிக்கவில்லை என அரசு தரப்பிற்கு முரணாக சாட்சியம் அளித்துள்ளார்.

**13)** மருத்துவர் திரு.காளிராஜ் (அ.சா.7), கடந்த 13.03.2016 ம் தேதி இரவு 07.20 மணியளவில் பணியிலிருந்தபோது இராஜேந்திரன் என்பவர் சிகிச்சைக்காக வந்ததாகவும், அவரை விசாரித்தபோது அன்றையதினம் மாலை 05.00 மணியளவில் அவரது வீட்டினருகே **"அடையாளம் தெரிந்த 5 நபர்கள் (2 ஆண்கள், 3 பெண்கள்) கட்டை, கைகளால் அடித்ததில் காயம் ஏற்பட்டதாகவும்"** அவரை பரிசோதித்ததில், அவருக்கு வலது இடுப்பு பகுதியில் வலியும், வலது முதுகின் கீழ் பகுதியில் வலியுடன் வீக்கமும், முதுகின் கீழ் பகுதியில் வலியும், வலது காலின் பின் பகுதியில் வலியுடன் வீக்கமும் காணப்பட்டவரை உள்நோயாளியாக அனுமதித்து, மேல் சிகிச்சைக்காக மதுரை அரசு இராஜாஜி அரசு மருத்துவமனைக்கு பரிந்துரை செய்ததில் சிகிச்சைக்கு செல்லாததால் காயத்தின் தன்மை குறித்து சான்று வழங்க இயலவில்லை என சான்றளித்ததாக சாட்சியம் அளித்துள்ளார்.

**14)** திரு.பாலமுருகன்(அ.சா.8) உதவி ஆய்வாளர், **"புகாரில் எதிரிகள் யார், யார் திட்டியது, அடித்தது, கொலை மிரட்டல் விடுத்தது என குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றால் இல்லை. புகார் மற்றும் முதல் தகவல் அறிக்கை 8 நாட்கள் காலதாமதமாக நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது என்றால் சரிதான்"** என சாட்சியம் அளித்துள்ளார்.

**15)** 1 முதல் 6 எதிரிகள் மீதான இதச பிரிவு 147 ன் படியான குற்றச்சாட்டை பொறுத்து ஆராய்கையில், அ.சா.ஆ.1 புகாரில் எதிரிகள் சட்ட விரோதமாக கலகம்



C BHARATHI
Digitally signed by C BHARATHI
Date: 2024.06.28 18:29:57 +0530

செய்யும் நோக்கத்துடன் ஒன்றுகூடியதாக எவ்வித விபரமும் குறிப்பிடப்படவில்லை. அ.சா.1 தனது சாட்சியத்தில், எதிரிகள் சட்டவிரோதமாக கலகம் செய்யும் நோக்கத்துடன் ஒன்றுகூடியதாக எவ்வித சாட்சியமும் அளிக்கவில்லை. அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள் யாரும் எதிரிகள் சட்டவிரோதமாக கலகம் செய்யும் நோக்கத்துடன் ஒன்று கூடியதாக எவ்வித சாட்சியமும் அளிக்கவில்லை. ஆகவே எதிரிகள் மீதான இதச பிரிவு 147 ன் படியான குற்றச்சாட்டு அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படவில்லை என இந்நீதிமன்றம் கருதுகிறது.

**16)** 1 முதல் 6 எதிரிகள் மீதான இதச பிரிவு 294(b)ன் படியான குற்றச்சாட்டைப் பொறுத்து ஆராய்கையில், எதிரிகள், அ.சா.1 ஐ தகாத வார்த்தைகளால் திட்டியதாக புகாரில் குறிப்பிடப்பட்டுள்ளது. எதிரிகள் அ.சா.1 ஐ தகாத வார்த்தைகளால் திட்டியதாக அ.சா.1 சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.1 ஐ எதிரிகள் திட்டியதால் அ.சா.1 க்கும், மற்றவர்களுக்கும் தொந்தரவு (annoyance) ஏற்பட்டதாக அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள் யாரும் எவ்வித சாட்சியமும் அளிக்கவில்லை.

**17)** இவ்வழக்கினை ஆராய்ந்து பார்க்கும்போது, இதச பிரிவு 294(b) பிரிவுக்கான உட்கூறுகள் நிறைவேற்றப்படவில்லை என இந்நீதிமன்றம் கருதுகிறது. ஆகவே எதிரிகள் மீதான இதச பிரிவு 294(b)-ன் படியான குற்றத்தை அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்கள் மூலம் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்க தவறி விட்டதாக இந்நீதிமன்றம் கருதுகிறது.

**18)** 1, 2 எதிரிகள் மீதான இதச பிரிவு 324 ன் படியான குற்றச்சாட்டைப் பொறுத்து ஆராயும்போது, அ.சா.ஆ.1 புகாரில் எதிரிகள் கம்பு மற்றும் செங்கல்லால் அடித்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. அ.சா.1 தனது சாட்சியத்தில், 1 வது எதிரி கம்பால் தாக்கியதாகவும், 2 வது எதிரி பனஞ்சட்டம் மற்றும் செங்கலால் தாக்கியதாக சாட்சியம் அளித்துள்ளார். மருத்துவர் திரு.காளிராஜ்(அ.சா.7) தனது சாட்சியத்தில், "**அடையாளம் தெரிந்த 5 நபர்கள் கட்டை மற்றும் கைகளால் அடித்து காயம் ஏற்பட்டதாக"** சாட்சியம் அளித்துள்ளார்.



C BHARATHI Digitally signed by C BHARATHI Date: 2024.06.28 18:30:02 +0530

**19)** அ.சா.ஆ.4 விபத்து பதிவேடுடன்கூடிய காயச்சான்றில் **"அடையாளம் தெரிந்த 5 நபர்கள் தாக்கியதாக"** குறிப்பிடப்பட்டுள்ளது. அ.சா.1 ன் சாட்சியத்திற்கும், அ.சா.ஆ.4 விபத்து பதிவேடுடன் கூடிய காயச்சான்றிற்கும் ஒன்றுக்கொன்று முரணாக உள்ளது. அ.சா.1 ஐ, 1, 2 எதிரிகள் கம்பு மற்றும் செங்கலால் தாக்கி காயம் ஏற்பட்டதா? அல்லது 5 நபர்கள் சேர்ந்து தாக்கி காயம் ஏற்பட்டதா? என்பது குறித்து நீதிமன்றத்திற்கு சந்தேகம் எழுகிறது.

**Delay in FIR reaching court:-**

**20**) மாண்புமிகு சென்னை உயர்நீதி மன்றத்தின் Sivakumar and 2 others Vs State by Inspector of Police, Andimadam Police Station, Ariyalur District 2017 (1) MWN (Cr) 334 (DB) என்ற வழக்கில், First Information report - delay in lodging as also delay in reaching court - effect of - occurrence took place at 10.30 p.m. on 14.01.2013 - complaint given on 15.01.2013 at 10.30 a.m. - FIR reached Court on 16.01.2013 at 7.30 a.m. - Delay of 12 hours in giving Complaint and 36 hours delay in FIR reaching Court - Not been explained properly - unexplained delay would create doubt in prosecution case என முன்தீர்ப்பு ஏற்பட்டுள்ளது.

**21**) இந்த வழக்கில் புகார் 13.03.2016 ம் தேதி கொடுக்கப்பட்டு, அன்றையதினமே முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ள நிலையில், 8 நாட்கள் காலதாமதமாக முதல் தகவல் அறிக்கை நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டது சம்மந்தமாக எந்த விளக்கமும் அரசு தரப்பில் இந்நீதிமன்றத்தில் முன்னிலைப் படுத்தப்படவில்லை.

**22)** மேற்சொன்ன சுட்டிக்காட்டப்பட்ட முன்தீர்ப்புரையினை கருத்தில் கொண்டும், அ.சா.ஆ.4 விபத்து பதிவேடுடன்கூடிய காயச்சான்றிற்கும், அ.சா.1 ன் சாட்சியத்திற்கும் ஒன்றுக்கொன்று முரணாக உள்ளதாலும், அரசு தரப்பில் முதல் தகவல் அறிக்கை 8 நாட்கள் காலதாமதமாக நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டது சம்மந்தமாக எவ்வித விளக்கமும் இந்நீதிமன்றத்தில் முன்னிலை படுத்தாததாலும், கண்ணுற்ற சாட்சிகளான அ.சா.2, 5, 6 ஆகியோர்கள் அரசு தரப்பிற்கு பாதகமாக சாட்சியம் அளித்துள்ளதாலும், அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள் மற்றும்



C BHARATHI Digitally signed by C BHARATHI Date: 2024.06.28 18:30:07 +0530

சான்றாவணங்கள் மூலம், 1, 2 எதிரிகள் மீதான இதச பிரிவு 324ன் படியான குற்றச்சாட்டு சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படவில்லை என இந்நீதிமன்றம் கருதுகிறது.

**23)** 1 முதல் 6 எதிரிகள் மீதான இதச பிரிவு 506(2)ன் படியான குற்றச்சாட்டை பொறுத்து ஆராய்கையில் அ.சா.ஆ.1 புகாரில் எதிரிகள், அ.சா.1 ஐ கொலை மிரட்டல் விடுத்ததாக கூறப்பட்டுள்ளது. எதிரிகள், அ.சா.1 ஐ கொலை மிரட்டல் செய்ததாக அ.சா.1 சாட்சியம் அளித்துள்ளார். எதிரிகள் கொலை மிரட்டல் செய்ததால் அசா.1 க்கு அச்சுறுத்தல் மனதளவில் பயத்தை விளைவித்ததாகவோ, அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள் யாரும் எவ்வித சாட்சியமும் அளிக்கவில்லை. எனவே அரசு தரப்பில் 1 முதல் 6 எதிரிகள் மீதான இதச பிரிவு 506(i)-ன் படியான குற்றச்சாட்டு சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படவில்லை என இந்நீதிமன்றம் கருதுகிறது.

**24)** மேற்கண்ட ஆய்வுகளின் அடிப்படையில் 1 முதல் 6 எதிரிகள் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளை நிரூபிக்கும் வகையில் அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள் சாட்சியம் அளிக்கவில்லை. ஆகவே 1 முதல் 6 எதிரிகள் மீதான குற்றச்சாட்டுகளை நிரூபிக்கும் வகையில் அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள் யாரும் சாட்சியம் அளிக்காததால், எதிரிகளின் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு இடமின்றி அரசு தரப்பில் நிரூபிக்கத் தவறி விட்டதாக இந்நீதிமன்றம் கருதுகிறது.

**25)** In the case of **V.D. Jhingam -Vs- State of Uttar Pradesh** the Hon'ble Supreme Court has held that it is also the cardinal rule of our criminal jurisprudence that the burden in the web of proof of an offence would always lies upon the prosecution to prove all the facts constituting the ingredients beyond reasonable doubt. If there is any reasonable doubt, the accused is entitled to the benefit of the reasonable doubt என முன் தீர்ப்பு ஏற்பட்டுள்ளது. எனவே சந்தேகத்தின் பலனை 1 முதல் 6 எதிரிகளுக்கு வழங்கி அவர்களை இவ்வழக்கில் இருந்து விடுதலை செய்வதே நீதியின் நலனுக்கு உகந்தது என இந்நீதிமன்றம் கருதுகிறது.



C BHARATHI
Digitally signed by C BHARATHI
Date: 2024.06.28 18:30:12 +0530

**26)** முடிவாக இந்த வழக்கில் அரசு தரப்பு வழக்கு சம்பவத்தை குறித்து தெளிவான சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்க தவறிவிட்டதாக தீர்மானித்து, 1, 2 வது எதிரிகளின் மீது சட்டப்பிரிவுகள் 147, 294(b), 324, 506(2) இதசவின் கீழும், 3 முதல் 6 எதிரிகளின் மீது சட்டப்பிரிவுகள் 147, 294(b), 506(2) இதசவின் கீழான குற்றத்திற்கு குற்றவாளிகள் இல்லை என்று முடிவு செய்து, எதிரிகளை குவிமுச பிரிவு 248(1)-ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

**27)** மேலும் இந்த வழக்கில் சொத்துக்கள் எதுவும் தாக்கல் செய்யப்படாததால், சொத்து குறித்து உத்தரவு இல்லை. எதிரிகள் எழுதிக் கொடுத்த பிணை பத்திரம் மேல்முறையீட்டு காலத்திற்குப் பின்னர் இரத்தாகும் என உத்தரவிடப்படுகிறது.

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்தாளருக்கு சொல்லப்பட்டு, அவரால் குறிப்பு எடுக்கப்பட்டு, பின்பு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு, 2024-ஆம் ஆண்டு ஜுன் மாதம் 28-ஆம் நாள் இன்று திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

C BHARATHI Digitally signed by C BHARATHI Date: 2024.06.28 18:30:19 +0530

நீதித்துறை நடுவர் எண்.II,
திருவில்லிபுத்தூர்.

<u>அரசு தரப்பு சாட்சிகள்</u>

| | |
|---|---|
| அ.சா.1 | திரு.இராஜேந்திரன் |
| அ.சா.2 | திருமதி.கருப்பாயி |
| அ.சா.3 | திரு.முத்துபாண்டி |
| அ.சா.4 | திரு.வைரமுத்து |
| அ.சா.5 | திரு.சங்கரலிங்கம் |
| அ.சா.6 | திருமதி.கிருஷ்ணம்மாள் |
| அ.சா.7 | திரு.காளிராஜ், மருத்துவர் |
| அ.சா.8 | திரு.பாலமுருகன், உதவி ஆய்வாளர் |
| அ.சா.9 | திருமதி.இராமலட்சுமி, புலன் விசாரணை அதிகாரி |



C BHARATHI Digitally signed by C BHARATHI Date: 2024.06.28 18:30:24 +0530

**<u>அரசு தரப்பு சான்றாவணங்கள்</u>**

| | | |
|---|---|---|
| அசாஆ.1 | – | புகார் மனு |
| அ.சாஆ.2 | – | பார்வை மகஜரிலுள்ள அ.சா.3–ன் 1 வது கையெழுத்து. |
| அசாஆ.3 | – | பார்வை மகஜரிலுள்ள அ.சா.4–ன் 2 வது கையெழுத்து. |
| அசாஆ.4 | 13.06.2016 | விபத்து பதிவேடுடன் கூடிய கருத்துரை |
| அசாஆ.5 | 13.03.2016 | முதல் தகவல் அறிக்கை. |
| அசாஆ.6 | 13.03.2016 | பார்வை மகஜர். |
| அசாஆ.7 | 13.03.2016 | மாதிரி வரைபடம். |
| அசாஆ.8 | 27.01.2019 | சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை |

**<u>அரசு தரப்பு சான்றுப் பொருள்</u>** - இல்லை
**<u>எதிரிகள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்</u>** - இல்லை

எதிரிகள் கைது செய்யப்பட்ட நாள் – Nil
எதிரிகள் பிணையில் சென்ற நாள் – 31.03.2016–ம் தேதி முன் பிணையில் சென்றுள்ளார்கள்.

C BHARATHI
Digitally signed by C BHARATHI
Date: 2024.06.28 18:30:31 +0530

நீதித்துறை நடுவர் எண்.II,
திருவில்லிபுத்தூர்.